2009 ஜூலை 21] [திரு. என்.ஆர். ரெங்கராஜன்]

உயர்மட்டப் பாலமாகக் கட்டிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10–35*

***மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியிலே ஏற்கெனவே 4, 5 பாலப் பணிகள் நடைபெற்று வருகின்றன. வெள்ளப் பகுதியைப் போய் பார்வையிட்ட அந்த நேரத்திலே, அந்தப் பாலமும் பார்வையிடப்பட்டது. நபார்டு வங்கியினுடைய ஒத்துழைப்பு என்று தெரிவிக்கிறார். நானும் அந்தப் பதிலைச் சொன்னதன் காரணமாக அவரும் திரும்ப இதைச் சொல்லியிருக்கிறார். ஏற்கெனவே நபார்டு வங்கியினுடைய ஒப்புதலுக்கு பல பாலப் பணிகள் அனுப்பப்பட்டு இருக்கின்றன. அவற்றில் இதுவும் இடம் பெறக்கூடிய வகையிலே இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

(ஆஊ) சேரன்மகாதேவி தொகுதி, பள்ளிச் சுற்றுலாவின்போது உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. வேல்துரை.

திரு. பா. வேல்துரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழக முதல்வர் அவர்களிடத்திலே இதுவரை நஷ்ட ஈடு கேட்டு, பெறாதவர்களே யாரும் கிடையாது. ஆனால், என்னுடைய தொகுதியிலே கடந்த 1–9–2008–ல் பள்ளிச் சுற்றுலா சென்றபோது இறந்த ஒரு மாணவி காமாட்சி மற்றும் உடன் சென்ற சமையல் உதவியாளர் கணபதியம்மாள் ஆகிய இரண்டு பேருக்கும் நஷ்ட ஈடு வழங்கவேண்டும் என்று நான் 7–10–2008 அன்றே மனு செய்திருந்தேன். ஆனால், இதுவரை உதவி வழங்கப்படவில்லை. கணபதியம்மாளின் குடும்பம் மிகவும் ஏழ்மையான குடும்பம். அவரது தாயார் ஊனமுற்றவர். மிகவும் கஷ்டப்படும் குடும்பம். நான் நேரடியாகப் போய்ப் பார்த்தேன். எனவே, தயவுகூர்ந்து போதிய அளவிற்கு, திருப்தியான அளவிற்கு அந்தக் குடும்பத்திற்கு நஷ்ட ஈடு வழங்கி உதவுமாறு நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைத் தங்கள்முலம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

[2009 ஜூலை 21

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோல, இந்தப் பரிவுத் தொகை வழங்குவதிலே தாமதம் ஏற்பட்டது உண்மையானால், அந்தத் தாமதத்திற்கு எந்த அதிகாரி காரணமாக இருக்கிறாரோ, அது பற்றி விசாரிக்கப்பட்டு, அவர் நடவடிக்கைக்கு உள்ளாவார் என்பதையும், பரிவுத் தொகை நிச்சயமாக வெகு விரைவிலே குறிப்பிடப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆள) மேட்டூர், மின்சார வாரியப் பணிமனை ஊழியர்கள் வேலையின்றிப் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில், மேட்டூர் மின் உற்பத்திக் கேந்திரமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. அங்கு 75 ஆண்டுக் காலம் சிறப்பாக இயங்கி வருகிற மின்சார வாரியப் பணிமனை, work shop இருக்கிறது. அதிலே இப்போது உற்பத்தியை நிறுத்தச் சொல்லிவிட்டார்கள். மின்சார வாரியத்தின் சார்பாக உற்பத்தியை நிறுத்தச்சொல்லிவிட்டு, அங்கே உற்பத்தி செய்யப்படுகிற உயர் மின் கோபுரங்கள், அதற்கான உதிரிப் பாகங்கள் தயாரிக்கும் பணிகளைத் தனியாருக்குக் கொடுத்துவிட்ட காரணத்தால், அங்கே நீண்ட காலமாக நிரந்தரப் பணியாளர்களாகப் பணியாற்றி வருகிற 350 பேரின் வாழ்க்கை கேள்விக்குறியாகி இருக்கிறது. தங்களுக்கு நிதி உதவி வேண்டும் என்று அவர்கள் கேட்ட நேரத்தில் "நாங்கள் நிதியைக் கொடுக்கிறோம், வரக்கூடிய பணி உத்தரவு அடிப்படையில் உதிரிப் பாகங்களையெல்லாம் தயாரித்து நீங்களே விற்பனை செய்துகொள்ளுங்கள். வரக்கூடிய இலாபத்தினைச் சம்பளமாக எடுத்துக்கொள்ளுங்கள்" என்று மின்சார வாரியத்தினர் சொல்லக்கூடிய நிலை உருவாகியிருக்கின்ற காரணத்தால் 350 நிரந்தரப் பணியாளர்களின் நிலை பாதிக்கப்பட்டிருக்கிறது. தனியார் துறை உள்ளே வர இது வழி வகுக்கின்ற காரணத்தாலே, மீண்டும் அங்கே மின் உற்பத்திக்குத் தேவையான மின் கோபுரங்களைத் தயாரிப்பதற்கும், அந்தத் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கும் மின்சார வாரியம் ஆவன செய்ய வேண்டும் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.